Registered No. M. 2330

"SIDDHANTHAM
Vol. 35—No. 10

CONNEMARA PUBLIC LIBRARY
16 OCT 1962
MADRAS

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 35 | சுபகிருது ஐப்பசி 1962 அக்டோபர் | இதழ் 1

உள்ளுறை பக்கம்

கச்சியும் கச்சபேசமும் ... 273

பாவம் தீரும் வழி ... 285

சைவ சாத்திர இலக்கியம் ... 289

பத்திராசிரியர்: அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.,

உதவிப் பத்திராசிரியர்: மு. நாராயணசாமி

சைவ சித்தாந்த மகா சமாஜம்

12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

# சமாஜத் தேர்வுகள்

நமது சமாஜத்தின் சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகள் நவம்பர் 24, 25 தேதிகளில், சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும். மேற்குறித்த இரண்டு நாட்களிலும் காலை மாலை இருவேளைகளிலும் தேர்வுகள் நடைபெறும் இலக்கணம், இலக்கியம், உரைநடை, சாத்திரம் என்னும் நான்கிலும், நான்கு தேர்வுகள் நான்கு வேளைகளில் நிகழும். தேர்வு எழுத விரும்புவோர் அக்டோபர் 31 ஆம் தேதிக்குள் விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும் (சைவசித்தாந்த மகா சமாஜம், 12 கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4) விண்ணப்பத்தில் தமது பெயர், பிறந்த தேதி, தந்தையார் பெயர், பொதுக் கல்வியின் தகுதி, முகவரி என்பனவற்றைத் தெளிவுற எழுதித் தேர்வுக் கட்டணத்துடன் அனுப்புதல் வேண்டும்.

# நாயன்மார் திருநட்சத்திரங்கள்

| | | |
|---|---|---|
| அக்டோபர் | புரட்டாசி | |
| 14 | 28 | உருத்திர பசுபதியார் |
| | ஐப்பசி | |
| 21 | 5 | சத்தியார் |
| 29 | 13 | மெய்கண்டார் |
| 31 | 15 | பூசலார் |
| நவம்பர் | | |
| 2 | 17 | ஐயடிகள் காடவர்கோன் |
| 10 | 25 | திருமூலர் |
| 11 | 26 | நின்றசீர் நெடுமாறர் |
| 12 | 27 | இடங்கழியார் |

Reg. M. 2330

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 35 | சுபகிருது ஐப்பசி 1962 அக்டோபர் | இதழ் 10

# கச்சியும் கச்சபேசமும்

ந. ரா. முருகவேள்

## முன்னுரை

'கச்சி' என்பது காஞ்சிபுரத்திற்கு மிகப் பழங்காலந் தொட்டு வழங்கி வரும் பெயர். "கச்சியோனே கைவண் தோன்றல்" என்பது பெருமபாணாற்றுப் படை. மணிமேகலையின் கண் "கச்சி மாநகர் புக்க காதை" என வருதலும் காணலாம். கச்சி என்னும் சொல்லைப் போலவே 'காஞ்சி' என்னும்சொல்லும் மிகப்பழமையானதொன்று.

## அருளியல் நகரம் :

காஞ்சிபுரம் முத்திதரும் நகரங்கள் ஏழனுள் முதன்மை மிக்கது. இதனை 'நகரேஷு காஞ்சி' என்னும் வட சொற்றொடர் இனிதுணர்த்தும். உலகிலேயே மிகப் பழமை வாய்ந்த நகரங்களுள் ஒன்றாக மதிக்கத் தக்க மாட்சிமை யுடையது காஞ்சிபுரம். கி. பி. 640இல் இயூன்-சங்க் என்னும் சீன யாத்ரிகன், இங்குவந்து அதன் சிறப்புக்களைக் கண்டு வியந்து பாராட்டிச் சென்றிருக்கின்றான். 'நகர அமைப்பு (Town Planning) முறையில், காஞ்சிபுரம் உலகிலேயே மிகவும் சிறப்பிடம் பெற்றொளிர்கின்றது' எனக்

---

சென்னை அரண்மனைக்காரன் தெருவிலுள்ள கச்சாலீசுவரர் கோயிலில் நிகழ்ந்த மாதாந்தர வழிபாட்டின் போது திரு. T. புருஷோத்தம முதலியார், M.L.C. அவர்கள் தலைமையிற் பேசியது. (23—9—62)

கெட்டிஸ்(Prof. Geddes) துரைமகனார் புகழ்ந்து போற்றுகின்றார். உலகில் எத்துணையோபல சிறந்த பெருநகரங்கள் தோன்றிச் சிலகாலம் இருந்து, பின்னர் இருந்த இடமும் தெரியாமல், மருங்கற அழிந்து மாய்ந்தொழிந்து போயின. நமது தமிழகத்திலேயே, சோழர்களின் தலைநகரங்களாக விளங்கிய உறையூர் காவிரிப்பூம்பட்டினம் முதலிய நகரங்களும், சேர வேந்தர்களின் தலைநகரமாகத் திகழ்ந்திருந்த வஞ்சிமாநகர் முதலியனவும் அழிந்து போயின. ஆனால், பாண்டியர்களின் தலைநகரம் ஆகிய மதுரையும், பல்லவர்களின் தலைநகரமாகிய காஞ்சியும் தொன்றுதொட்டு இன்றுகாறும், தம் பழஞ் பெருஞ் சிறப்புக்களிற் சிறிதும் குன்றாது நின்று நிலவி வருகின்றன. மதுரையின் மாட்சிமைக்கு மீனாட்சியம்மை காரணம். காஞ்சியின் பெருமைக்குக் காமாட்சியம்மை காரணம். அம்மையின் அருள் காரணமாகவே இவ்விரு பெரு நகரங்களும் செழித்தோங்கிச் சிறந்து திகழ்ந்து வருகின்றன.

**கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர் :**

காஞ்சிபுரத்தின் புகழ் மிகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தேசம் எங்கும் பரவியிருந்தது. பிறதேசங்களெல்லாம் காஞ்சியின் சிறப்பினைப் புகழ்ந்து கொண்டாடின. இதனை ஏறத்தாழ 1600 ஆண்டுகட்கு முற்பட்டவராகக் கருதப்பெறும் மாணிக்கவாசகர், 'தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில்' என அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம். 'தேசமெல்லாம் புகழ்ந்தாடுதல்' என்னும் அடைமொழி, கச்சிக்கும் திருவேகம்பன் செம்பொற்கோயிலுக்கும் பொருந்துவதாகும். இங்ஙனமே 'கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர்' என்று திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்திருத்தலும் அறிந்தின்புறற்பாலது. சந்திரகுப்த மௌரியனின் அமைச்சராக விளங்கி, 'அர்த்த சாஸ்திரம்' என்னும் அரிய பெரிய நூலினை எழுதிய சாணக்கியர் காஞ்சிபுரத்திற் பிறந்தவர். சங்கரர் இராமாநுஜர் பரிமேலழகர் போன்ற பெருமக்கள் காஞ்சியில் வாழ்ந்தவர்கள். பௌத்த சமயத்தின் பெருநூலாசிரியர்களாகச் சைனா திபெத்து ஜப்பான் பர்மா இலங்கை முதலிய நாடுகளிலெல்லாம் போற்றப்

பெறும் புகழ் ஓங்கிய திக்கநாகர் தருமபாலர் தரும கீர்த்தி முதலிய பெருமக்கள் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்களே யாவர். கடம்ப அரசர் குலத்தைத் தோற்றுவித்த முதல் வனாகிய மயூரசன்மன் (கி. பி. 350) என்னும் மன்னவன் பல்லவர்களுக்குப் பகைவனாயினும், 'கல்வியிற் கரை இலாத காஞ்சி' மாநகரத்தின் சிறப்புக் கருதி, அங்கு மாறுவேடங் கொண்டு மறைந்து வந்திருந்து கல்வி பயின்று சென்றனன் என வரலாறு கூறுகின்றது! காஞ்சிபுரம் கயிலாச நாதர் கோயில், வைகுந்தப்பெருமாள் கோயிற் சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றனவாகும்.

**சான்றோர்கள் போற்றிய காஞ்சி :**

காஞ்சிபுரம் திருக்குறிப்புத் தொண்டர், சாக்கியர், ஐயடிகள் காடவர்கோன் என்னும் நாயன்மார்கள் வாழ்ந்திருந்து வழிபட்டு அருள்பெற்ற மாட்சிமை சான்றது. கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாசாரியார், சேக்கிழார் சுவாமிகள், சிவஞான சுவாமிகள், தணிகைப் புராணம் முதலியன பாடிய கச்சியப்ப முனிவர் முதலிய பெருமக்கள் பலரும் காஞ்சிபுரத்தின்பால் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர். காஞ்சிபுரத்தில் தங்கியிருந்த பொழுதே ஆசிரியர் சிவஞான சுவாமிகள், சிவஞான போதப் பேருரையினை வகுத்தருளினர் என்பர். சேக்கிழார் சுவாமிகள் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றினைப் பற்றுக்கோடாகக் கொண்டு, தொண்டை நாட்டின் பெருமையினையும், காஞ்சிபுரத்தின் சிறப்புக்களையும் சுவைதுளும்பப் பெரிதுவந்து பாடுகின்றார். காஞ்சி என்னும் சொல்லே அவர்தம் திருவுளத்தில் தேனும் இன்னமுதமுமாய்த் தித்திக்கின்றது. ஆதலின், அவர் அதனைத் திரும்பத் திரும்பப் பலகால் பல பொருள்களில் அமைத்துப் பின்வரும் செய்யுளிற் பாடி இன்புறுத்துகின்றார்.

"தண் காஞ்சி மென்சினைப்பூங் கொம்பர் ஆடல்
சார்ந்தசைய, அதன்மருங்கு சுரும்பு தாழ்ந்து
பண்காஞ்சி இசைபாடும் பழனவேலிப்
பணைமருதம் புடையுடைத்தாய்ப் பாரில் நீடும்
திண் காஞ்சி நகர், நொச்சி இஞ்சி சூழ்ந்த
செழுங்கிடங்கு, திருமறைகள் ஒலிக்கும் தெய்வ
வண்காஞ்சி அல்குல்மலை வல்லி காக்க
வளர்கருணைக் கடலுலகம் சூழ்ந்தால் மானும்"

**காஞ்சி என்னும் சொற்பொருட் காரணம்:**

இங்ஙனம் சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்து மகிழ்ந்த 'காஞ்சி' என்னும் சொல்லின் செம்பொருட் குறிப்புக்களை யெல்லாம், ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தாம் இயற்றியருளிய காஞ்சிப்புராணம் என்னும் நூலில் அழகுற விளக்குகின்றார்:

**1. க+அஞ்சி = காஞ்சி**

க-பிரமம், சிவபெருமான்; அஞ்சித்தல்-வழிபடுதல். சிவ பெருமானை, அம்மை அயன் மால் முதலிய பலரும் வழிபட்டுஅருள்பெற்ற இடமாதலின், 'காஞ்சி' என்னும்காரணப் பெயர் இந்நகரத்திற்கு அமைவதாயிற்று.

"பிறங்கு கவ்வெனும் மொழிப்பொருள் பிரமம்.
பிரமம் ஆனயாம் அஞ்சிக்கப் படலால்,
உறங்கிடாப் புகழ்க் காஞ்சிஎன் றுரைக்கும்
ஒருதிருப் பெயர் எய்தும் இந்நகரம்"

'பிரமம்' என்னும் சொல் சிவபெருமானைக் குறிக்கும் என்பதற்குப் பாம்பன் குமர குருதாச சுவாமிகள், "ஆதிப் பிரமம் வெளிப்படுத்த அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே" என வரும் திருவாசகத் திருமொழியினை மேற் கோள் காட்டியிருப்பது ஈண்டு உணர்ந்து இன்புறுதற் குரியது.

2. க-பிரமன், அயன், நான்முகன். அஞ்சுதல்-பூசித் தல், வழிபடுதல். நான்முகக் கடவுளாகிய பிரமன் வழி பட்டு உலகைப் படைக்கும் ஆற்றலைப் பெற்ற இடம்.

"கவ்வென்பது அயன்பேர் என்ன, முந்து இருக்கு ஓதும்
அஞ்சு என்பகுதி அடைவொடு பூசை மொழியும் மாதோ"

"திசைமுகனுல் அஞ்சிக்கப் படுதலினுல்
காஞ்சி எனத் திசைபோய் மல்கும்"

3. க-சென்னி, தலை; அஞ்சித்தல்-வழிபடுதல். எத் தகையவரும் தலையாய தலம் எனச் சென்னி மேற் கொண்டு வழிபடத் தக்கது.

4. க-இன்பம்; அஞ்சித்தல்-அடைவித்தல்; யாவர்க் கும் பேரின்பத்தை அடைவிப்பது.

"மற்றும் கவ்வெனல் சென்னியோடு இன்பம்
மலரவன் தலையுணர்த்தும்; அஞ்சித்தல்

சொற்ற பூசனை அடைவும் ஆம். யாரும்
 சென்னி மேற்கொடு தொழத்தகும் சிறப்பால்,
பற்றி வைகுநர் பேரின்பம் உறலால்,
 பங்க யத்தவன் வழிபட லானும்,
பெற்ற தாகும் இத்தி ருப்பெயர்! இதனால்
 பிரம லோகம் என்று ரைக்கவும் படுமால்."

5. காஞ்சி—மகளிரின் உந்தி, கொப்பூழ். நிலமகளுக்கு உந்தித் தானத்தைப் போன்ற சிறந்த தலம்.

"இலகு வாள்நகை அரிமதர் மழைக்கண்
 இருண்ட வார்குழல் வேய்மருள் பணைத்தோள்
கலப மாமயில் இயல் எழில் மடவார்
 உந்தித் தானத்தைக் காஞ்சி என் றுரைப்பர்;
சுலவு வெணடிரைப் பனிக்கடல் உடுக்கைத்
 தொல்லை நானில மடக்கொடி தனக்குக்
குலவு காஞ்சிநற் றனமாய்ப் பொலிந்த
 கொள்கை யானும்அத் திருப்பெயர் வழங்கும்"

**காஞ்சியின் சிறப்பு:**

காஞ்சிபுரம் கோயில்கள் நிறைந்த நகரம். அதனைப் போன்ற மிகச் சிறந்த கோயில்கள் நிறைந்த நகரம் பிறிதொன்றில்லை எனலாம். பலவகைப் பட்டனவும், பழமையும் பெருமையும் வாய்ந்தனவும் ஆகிய கோயில்கள் அங்குள்ளன. சமணம் பௌத்தம் சைவம் வைணவம் என்னும் பல்வேறு சமயங்களின் கோயில்களும் அங்கு உண்டு. பல்லவர்காலம், சோழர்காலம், பிற்காலம் ஆகியவற்றைச் சேர்ந்த பல கோயில்கள் அந்நகரை அணிசெய்கின்றன.

அது பற்றியே "கச்சிப் பலதளியும் ஏகம்பத்தும் கயிலாய நாதனையே காணலாமே" என நாவுக்கரசர் நவின்றருளினர். காஞ்சிபுரத்தின் அதிசயங்கள் குறித்துச் சேக்கிழார் சுவாமிகள் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றிலும், கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணம் திருநகரப்

1. "Of all the ancient places in South India there is none that can rival the ancient Kanchi in the variety, antiquity and importance of ancient monuments. Here are Jaina and Buddhist, Saiva and Vaishnava temples of the Pallava Chola and later times, which it would be difficult to imagine in any other place".

—K. N. DIKSHIT.

படலத்திலும், சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணம் விம்பிதப் படலத்திலும் விரிவாக விளக்கிப்பாடியுள்ளனர். சீர்காழிக்குப் பன்னிரண்டு பெயர்கள் உளவாதல்போல, காஞ்சிபுரத்திற்கும் பன்னிரண்டு பெயர்கள் வழங்கும். அவைமுறையே காஞ்சிபுரம், பிரளயசித்து, சிவபுரம், விண்டுபுரம், திரிமூர்த்திவாசம், பிரமபுரம், காமபீடம், தபோமயம், சகற்சாரம், சகலசித்தி, கன்னிகாப்பு, துண்டீரபுரம், தண்டகபுரம் என்பனவாகும். இப் பெயர்க் காரணங்களால் காஞ்சிபுரத்தின் அருமை பெருமைகளை யாவரும் அறிந்தின்புறலாம்.

**காஞ்சியைப் பற்றிய தனிக் கவிதைகள் :**

காஞ்சிபுரத்தைப் பற்றிப் பலப்பல சிறந்த அழகிய இனிய தனிக் கவிதைகள் இலக்கியங்களில் வழங்குகின்றன. அவைகள் அறிஞர்களின் உள்ளங்களைப் பெரிதும் கொள்ளை கொள்ள வல்லவை.

ஏரி இரண்டும் சிறகா, எயில்வயிருக்,
காருடைய பீலி கடிகாவா,—நீர்வண்ணன்
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றோரான் கச்சிப் பொலிவு".

மலிதேரான் கச்சியும், மாகடலும் தம்முள்
ஒலியும் பெருமையும் ஒக்கும்;—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா; கச்சி
கடல்படுவ எல்லாம் படும்."

" ஆடவர்கள் எவ்வா றகன்றுறைவார் ? வெஃகாவும் 2
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் ! இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு ? "

தொல்லை மறைதேர் துணைவன்பால், ஆண்டுவரை
எல்லை இருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலாள்,
ஓங்குலகில் வாழும் உயிர் அனைத்தும் ஊட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி இடை."

2 வெஃகா—யதோத்காரி கோயில்
பாடகம்—பாண்டவதூதர் கோயில்
ஊரகம்—உலகளந்த பெருமாள் கோயில்
பஞ்சரம்—கருப்பக்கிரகம், திருவுண்ணாழிகை.

"பூண்தாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும்—நாண்தாங்கு
வண்மைசால் சான்றவரும் காஞ்சி வளம்பதியின்
உண்மையால் உண்டிவ் வுலகு"

என்பன போன்ற பல தனிப்பாடல்கள், காஞ்சியின் பெருமையைக் குறிப்பனவாகத் தண்டியலங்காரம், வீரசோழியம், யாப்பருங்கலம் முதலிய தமிழிலக்கண நூல்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

"கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டம்காவல்
மெச்சி இனிதிருக்கும் மெய்ச்சாத்தன்—கைச்செண்டு,
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு,"

என்னும் பழைய வெண்பாச் செய்யுள் ஒன்று, அடியார்க்கு நல்லார் அவர்களால் தமது சிலப்பதிகாரவுரையில் மேற்கோளாக எடுத்தாளப் பெறுகின்றது.

## காஞ்சியும் கரிகாலனும்:

காஞ்சிபுரம் கரிகாற் பெருவளத்தானல் நான்கு காதம் விரிவாக்கப் பட்டு, நாற்பத்தெண்ணுயிரம்வேளாண் மக்களைக் குடியேற்றப் பெற்றது என்னும் செய்தி,

"என்றும் உள்ளஇந் நகர்கலி யுகத்தில்
இலங்கு வேற் கரி காற்பெரு வளத்தோன்
வன்றி றற்புலி இமயமால் வரைமேல்
வைக்க ஏகுவோன் தனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத்
திருந்து காதம்நான்குட்பட வகுத்துக்
குன்று போலும்மா மதில்புடை போக்கிக்
குடியி ருத்தின கொள்கையின் விளங்கும்"

என்னும் பெரியபுராணப் பாடலாலும் தெரிகின்றது.

"விண்ணு ளார்மறை கள்வே தம்விரித் தோதுவார்
கண்ணு ளார்கழ லின்வெல் வார்கரி காலனை
நண்ணு வார்எழில் கொள்கச் சிநகர் ஏகம்பத்து
அண்ண லார்ஆடு கின்ற அலங்கா ரம்மே"

எனவரும் திருஞான சம்பந்தர் தேவாரமும் கரிகாலனைக் குறிப்பிடுதல் காணலாம்.

## ஏகம்பநாதர்:

காஞ்சிபுரம் ஏகம்பநாதர் கோயிலைப் போலவே, கச்சபேசமும் முதன்மையும் சிறப்பும் வாய்ந்த கோயில் ஆகும். இறைவன் 'வெள்ளங் காட்டி வெருட்டிட'

அம்பிகை நடுக்கம் (கம்பம்) கொண்டு சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்ட காரணத்தால், கோயில் 'ஏகம்பம்' எனப் பெயர் பெற்றது. ஆம்ப்ரம்—மாமரம். இறைவன் ஒரு மாமரத்தின் கீழ் (ஏகம் + ஆம்ப்ரம் = ஏகாம்பரம்) எழுந்தருளியிருத்தலின், ஏகாம்பரநாதர் எனப் பெயர் பெற்றார் எனினுமாம்.

"முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கால ரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது"

எனவரும் சுவைமிகுந்த காளமேகப் புலவர் பாடலில், ஏகாம்பரநாதர் 'ஒருமாவின் கீழர்' எனக் குறிப்பிடப் படுதல் அறிதற்குரியது.

**கச்சபேசம் :**

'கச்சபேசம்' என்னும் தொடர், கச்சபம் + ஈசம் என்னும் இருசொற்கள் கொண்டது. கச்சபம்—ஆமை. ஈசம்—கோயில், ஈசன் எழுந்தருளியிருப்பது. இச்சொல் ஈச்சுரம், ஈச்சரம் எனவும் வழங்கும். அமிர்தம் பெறுவதன் பொருட்டுத் தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்த பொழுது, திருமால் ஆமை வடிவம் கொண்டு மந்தர மலையைத் தாங்கினர். அந்நிலையிற் செருக்கு எய்திய திருமால் கடலைப் பெரிதும் கலக்கி உழக்கினர். அதுகண்டு தேவர்களும் பிறரும் அஞ்சி நடுங்கி வருந்தி அலமந்தனர். அதுபோது சிவபிரான் தோன்றி, ஆமை வடிவை மாய்த்து, அதன் செருக்கை ஒழித்து, அதன் ஓட்டினைத் தமது திருமார்பில் தரித்தார். தமது பிழையுணர்ந்து கழிவிரக்கம் கொண்ட திருமால், தமது கச்சப (ஆமை) வடிவில் சிவபெருமானை வழிபட்ட திருக்கோயிலே 'கச்சபேசம்' எனப் பெயர் பெற்றது. கச்சப + ஆலய + ஈசுவரர் என்னும் சொற்றொடரே கச்சாலீசுவரர் என மருவி வழங்கி வருகின்றது. 'கச்சாலை' என்னும் மரூஉச்சொல் 'கச்சபேசம்' என்பதனைக் குறிக்க நெடுங் காலத்திற்கு முன்னரே வழங்கியிருக்கின்றது. கச்சாலீசுவரரைப் பற்றிய குறிப்பு தமிழிலக்கியங்களில் எங்கேனும் வந்துள்ளதா? எனச் சிந்தித்தபொழுது, பின்வரும் இரண்டு பாடல்கள் நினைவிற்கு வந்தன.

"நீல மணிமிடற்றன் நீண்ட சடைமுடியன்
நூல்அணிந்த மார்பன் நுதல்விழியன்—தோலுடையன்
கைம்மான் மறியன் கனல்மழுவன் கச்சாலை
எம்மான் இமையோர்க்கு இறை"
"சீலத்தால் ஞானத்தால் தேற்றத்தால் சென்றகன்ற
காலத்தால் ஆராத காதலால்—ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாம்
கச்சிக்கச் சாலைக் கனி"

இவ்விரண்டு பாடல்களும் 'தண்டியலங்காரம்' என்னும் அணி இலக்கண நூலில் மேற்கோட் செய்யுள்களாக வருகின்றன. கயிலாசநாதர் கோயிலைக் கட்டுவித்த இராசசிம்மன் (கி.பி. 685-705) என்னும் பல்லவ மன்னனின் அவைக்களப் புலவராக விளங்கியிருந்த தண்டி என்னும் வடமொழிப் புலவர் இயற்றிய காவ்யாதர்ஸம் என்னும் வடமொழி நூலின் மொழிபெயர்ப்பே, தமிழ்த் தண்டி யலங்கார நூல். இதனைத் தமிழில்மொழிபெயர்த்து இயற்றியவர் அநபாய சோழனின் காலத்தவர் என்பதும், ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் பெருந்தகையின் மாணவர் என்பதும், அந்நூலின் பாடல்களில் வரும் குறிப்புக்களைக் கொண்டு தெளியப்படுகின்றன. காஞ்சிபுரத்தில் மிக முதன்மை வாய்ந்த திருக்கோயில்களுள் ஒன்றாகத் திகழும் கச்சபேசம் பற்றியும், தேவாரத் திருப்பதிகங்கள் பாடப் பெற்றிருத்தல் வேண்டும். அவைகள் இப்போது கிடையாமற் போயினமை, நம்மனோர் தவக்குறைவேயாகும். எனினும் இவ்விரண்டு பழம் பாடல்களும் கச்சாலீசுவரர் பெருமானை நாம் நினைந்து துதித்து உய்தற்குத் துணைபுரிவன ஆகும்.

"கச்சுற்றப் பாரப யோதர முலையாள்முன்
கற்புத்தப் பாதுல கேழையும்
ஒக்கப்பெற் றுள்விளை யாடிய
கச்சிக்கச் சாலையில் மேவிய பெருமாளே"

எனவரும் திருப்புகழ்ப்பாடலும் ஈண்டு உணர்தற்குரியது.

**சென்னைக் கச்சாலீசுவரர்:**

கிழக்கு இந்தியக் கம்பெனியில் 'துவிபாஷி'யாக இருந்தவர்களுள் திரு. களவாய் செட்டியார் என்பவர்ஒருவர். அவர் நாள்தோறும் கச்சிக் கச்சபேசரை வழிபடும்

நியமம் பூண்டிருந்தவர். தமது அலுவல் நிலைமைகளால் அது தடைப்படவே, அவர் பெரிதும் வருந்தினர். இறைவன் அவர்தம் கனவில் தோன்றி, 'நீ சென்னையிலேயே எமக்கு ஒரு கோயில் அமைத்து வழிபடலாம்' என்று பணித்தனர். அதன்படி திரு. களவாய் செட்டியார் அவர்கள் அமைத்த திருக்கோயில்தான் இது. அதனாலேயே இதற்குக் கச்சாலீசுவரர் கோயில் எனப் பெயர் வழங்குவதாயிற்று. எங்கே இருந்து நாம் நினைத்தாலும் இறைவன் நமக்கு அங்கே வந்து அருள்புரியும் தன்மையுடையவராக விளங்குகின்றார்.

"எங்கேனும் இருந்துன் அடியேன் உனை நினைந்தால்
அங்கேவந் தென்னொடும் உடனாகி நின்றருளி
இங்கேஎன் வினையை அறுத்திட் டெனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே"

"எங்கேனும், யாதாகிப் பிறந்திடினும், தன்னடியார்க்
கிங்கேஎன் றருள்புரியும் எம்பெருமான், எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையும்
சங்கேஒத் தொளிர்மேனிச் சங்கரன்றன் தன்மைகளே"

எனத் தேவார ஆசிரியர்கள் அருளிச் செய்தபடி, அன்பர் ஒருவரின் பொருட்டுக் காஞ்சிபுரத்துக் கச்சாலை ஈசுவரர், சென்னைக்கு எழுந்தருளி நம்மனோர்க்கும் அருள்புரிந்து வருகின்றார். ஓரிடத்திருந்து பெயர்ந்து செல்வோர், தாம் புதிது சென்று வாழத் தலைப்படும் இடத்தும், தம் முன்னையிடத்தின் பழக்க வழக்கங்களையும் பிறவற்றையும் விடாமல் உடன்கொணர்ந்து நிலைபெறுத்துவர். இதனை ஆங்கிலத்தில் 'Colonial preservation' என்பர். அம்முறையில் சென்னையில் அமைந்தனவே இக்கச்சாலீசுவரர், ஏகாம்பரேசுவரர், அருணாசலேசுரர், காளத்தி ஈசுரர் பெயர்களால் அமைக்கப் பெற்றுள்ள சென்னைக் கோயில்கள் ஆகும்.

**கதையும் கருத்தும் :**

கச்சபேசத்தில் துர்க்கை சாத்தன் சூரியன் வயிரவர் விநாயகர் ஆகிய ஐவரும் கூட இறைவனை வழிபட்டு,

அருள்பெற்றுச் சிறப்புற்றனர். கச்சிக் கச்ச பேசத்திற் போலவே, திருக்கச்சூர் என்னும் தலத்திலும் திருமால் சிவ பிரானை ஆமை வடிவில் வழிபட்டார். திருக்கச்சூர், இறை வன் சுந்தரர் பொருட்டுப் பிச்சை ஏற்று உணவளித்த தலம். அங்குள்ள கோயிலுக்கு 'ஆலக்கோயில்' என்றும் இறைவனுக்கு 'மலைமேல் மருந்தீசர்' என்றும் பெயர். தலபுராணக் கதைகள் இக்காலத்தில் ஒரு சிலருக்குப் புறக்கணிக்கத் தக்கன போலத் தோன்றலாம். எனினும் இத்தகைய கதைகள் எத்துணையோ பல நூற்றாண்டு களாக நம் முன்னோர்களாற் சொல்லவும் கேட்கவும் சுவைக்கவும் பெற்று வழங்கி வருவன. இலக்கியம் வர லாறு சமுதாயம் பண்பாடு முதலிய துறைகளில் இன்னோ ரன்ன கதைகள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. அவைகளை ஏற்றபெற்றி போற்றுதல் நமக்குக் கடமை யாகும். 3.

இத்தல வரலாற்றுக் கதையில் வரும் திருமால், மால் (மயக்கம்) கொண்டு உலவும் நம்மை ஒத்த உயிர்களையே குறிப்பதாகக் கொள்ளலாம். அவர்தம் ஆமை வடிவம் அறியாமையில் அழுந்தி வருந்தும் உயிர்களாகிய நம் இயல்பினைச் சுட்டுகின்றதெனலாம். ஆமையின் கால்கள் நான்கும், தலை ஒன்றும் ஆகிய ஐந்தும், உயிர்களின் ஐம் பொறிகளை யுணர்த்தும். ஆமை நீரும் நிலமும் ஆகிய ஈரிடத்தும் உலவும் தன்மையுடையது. உயிர்கள் நல்ல தனோடும் தீயதனோடும் தொடர்பு கொள்ளும் தன்மை யினை, இது குறிக்கின்றது. ஆமையின் மந்தகதி, உயிர் களின் தெளிவற்ற மந்தத் தன்மையினைப் புலப்படுத்தும்.

---

3. "Indian mythology is richer, vaster, very beautiful, and full of meaning. I have often wondered what manner of men and women they were who gave shape to these bright dreams and lovely fancies, and out of what gold mine of thought and imagination they dug them...Many of the problems of human life have a permanence and a touch of eternity about them, and hence the abiding interest in these ancient books...We can admire them and they become part of our mental heritage"

—Jawaharlal Nehru.

திருநாவுக்கரசர் தம்மை ஓர் ஆமையின் நிலைக்கு ஒப்பிட்டுக் கொள்ளுகின்றார் :

"வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கம் செய்யத்
தளைத்துவைத் துலையை ஏற்றித் தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற ஆமைபோல் தெளிவி லாதேன்
இளைத்துநின் றாடு கின்றேன் என்செய்வான் தோன்றினேனே"

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். முதலில் இன்பம் போலத் தோன்றி மயக்கிப் பின்னர்ப் பெருந்துன்பத்தில் அழுத்தி வருத்தும் உலகியல் நுகர்ச்சிகளில் உழலும் உயிர்களின் தன்மைக்கு, உலையை ஏற்றித் தழலெரி மடுத்த நீரின் இளஞ்சூட்டினை, முதலில் மகிழ்ந்து பின்னர்ச் சூடு ஏறஏறத் தாங்கொணாது பெரிதும் தளர்ந்து வருந்தி மாயும் ஆமையினுடைய தெளிவின்மையினை, நாவுக்கரசர் உவமை கூறியிருத்தல் நனிமிகப் பொருந்துவதாகும். இஃது உயிர்களாகிய நம்மனோரின் அறியாமை நிலைக்கு ஏற்ற எடுத்துக்காட்டு. நாலடியார் (331) செய்யுளிலும் இக் கருத்து வந்துள்ளது. இனி, மெய்யுணர்வு எய்தத்தக்க உயிர்களின் மேதகு நிலைக்கும் ஆமையையே ஏற்ற உவமையாக,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

எனவரும் திருக்குறளில், ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச் செய்திருக்கும் திறம் அறிந்தின்புறற் பாலது.

## முடிவுரை :

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, நாம் அனைவரும் உய்வதற்குச் சுந்தராம்பிகை சமேத கச்சாலீசுவரப் பெருமான் திருவருள், நமக்குத் துணைபுரிவதாக!

**மதுரைத் திருவருள் தவநெறி மன்ற வெளியீடு.**

# "பாவம் தீரும் வழி"

★★★

உலகிலுள்ள எல்லோரும் தெரிந்தோ, தெரியாமலோ பாவகருமங்கள் செய்ததினாலேயே இங்கு வந்து பிறக்கிறோம். குற்றம் செய்யாதவர்கள் சிறைச்சாலைக்குள் சென்று, அங்கு எவ்விதத் தண்டனையும் அனுபவிக்க வேண்டியதில்லை அல்லவா? அதேபோலப் பாவம் செய்யாதவர்கள், தாயார் வயிற்றில் பத்துமாதங்கள் சிறைப்பட்டிருக்கவும், இப்புவியில் பிறந்து துன்பம் யாதும் அனுபவிக்கவும் வேண்டியதில்லை. அதனாலேயே உண்மையை உணர்ந்த பெரியவர்களெல்லாம், திரும்பவும் இப்புவியில் பிறவாதிருக்க வரந்தரல் வேண்டும் என்று இறைவனிடம் தவங்கிடந்தும், நோன்பிருந்தும், வேண்டுதல் செய்தும் வந்திருக்கிறார்கள்.

அவர்களில் 81 வயதுவரை வாழ்ந்திருந்த, முதிர்ந்த அனுபவமுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் துன்பம் தரும் பிறப்பையறுக்கச் சுலபமான வழி இன்னதென்று கீழ்வருமாறு அருளியிருக்கிறார் :—

**"திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்**
**தீவண்ணர்திறம் ஒருகால் பேசா ராகில்**
**ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்**
**உண்பதன்முன் மலர் பறித்திட்டு உண்ணாராகில்**
**அருநோய்கள் கெடவெண்ணீறு அணியாராகில்**
**அளியற்றார் பிறந்தவாறு ஏதோ என்னில்**
**பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்**
**பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே."**

இத்தேவாரத்தில் பிறவிப் பிணியைப் போக்குவதற்கு நாம் ஐந்து காரியங்கள் செய்ய வேண்டும் என்கிறார். முதலாவது, மனத்தினால் செய்த பாவம் தீர ஆண்டவனது திருநாமமாகிய திரு ஐந்தெழுத்தைச் சொல்ல வேண்டும்; இரண்டாவது, வாக்கினால் செய்த பாவம் தீர, ஆண்டவனது பெருங்கருணையையும், பேராற்றலையும், பிழை பொறுக்

கும் தன்மையையும் விவரிக்கின்ற தேவாரப் பதிகங்களை வாயினால் பாடவேண்டும்; மூன்றாவது, உடம்பினால் செய்த பாவ கருமங்கள் தீர ஆண்டவனது திருக்கோயிலை உடல் வருந்தும்படி வலம் வரவேண்டும்; நான்காவது மனம், மொழி, மெய், என்ற மூன்றாலும் செய்யக்கூடிய பூஜையை முடித்த பின்னரே உணவு அருந்தவேண்டும்; (இது அவரவர்களது வீடுகளில் நடைபெற வேண்டியதாகும்.) ஐந்தாவதாகத் தொத்துநோய்க் கிருமிகளைக் கொன்று வியாதிகளை நீக்கக்கூடியதும் உடல் நாற்றத்தைப் போக்கக்கூடியதும், பாவங்களைத் தீர்க்கக் கூடியதும், அழகைக் கொடுக்கக்கூடியதும், ஞாபக சக்தியைத் தரத்தக்கதுமான திருநீறு அணியவேண்டும். இவ்வாறு செய்துவந்தால் இந்த ஜென்மத்தில் செய்த பாவம் இந்த ஜென்மத்திலேயே பரிகரிக்கப்பெற்று, பிறவியற்ற நிலை எய்தி, பேரின்பப் பெருவாழ்வு வாழலாம்; அவ்வாறு செய்யாதவர்களெல்லாம் பலபெரு நோய்களால் பீடிக்கப் பெற்று இறந்துகொண்டும், பிறந்துகொண்டுமே இருப்பார்கள் என்று கூறுகிறார்.

மதுரை ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோவிலில்நாம்ஒவ்வொருசெவ்வாய்க்கிழமை, வெள்ளிக் கிழமைகளிலும் இரவு 7-30 மணிக்கு அம்மன் சந்நிதியிலிருந்து திருநீற்றுப் பதிகத்தையும் திருஐந்தெழுத்துப் பதிகங்களையும் ஓதிக் கொண்டு, நான்கு ஆடிவீதிகளையும் வலமாக வந்து, சுவாமி சந்நிதியில் பிற திருமுறைகளை ஓதியபின் திருப்புகழைப் பாடிக்கொண்டு, திரும்பவும் அம்மன் சந்நிதிக்கு வந்து 9 மணிக்கு அதனைப் பூர்த்தி செய்து, விபூதிப் பிரசாதம் பெற்று அதனை அணிந்து கொள்வதால், அப்பர் பெருமான் அருளிய ஐந்து காரியங்களில், நான்கு காரியங்கள் பூர்த்தியாகிவிடுகின்றன. ஒருவருஷத்தில் (52 வாரங்களில்) வாரத்திற்கு இரண்டு நாட்கள் வீதம் 104 நாட்கள் பாடிக்கொண்டே கோயிலை வலம் வந்துவிடுவதால், அது பெரியதோர் பிராயச்சித்தமாக அமைந்துவிடுகிறது. வீடுகளில் பூசை செய்த பின்னரே உணவு அருந்துகின்ற நியதியை மேற்கொண்டு ஒழுகுகின்றவர்கள் ஐந்து காரியங்களையும் ஒரு சேரச் செய்யப் பெற்றவர்களாகி விடுகின்றனர்,

அவ்வாறு செய்கின்றவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்புள்ள எண்களுடன் பிறவிப் பிணியைத் தவிர்க்கின்றவர்களாகி விடுகின்றார்கள். அவ்வாறு பூஜை செய்து உணவு உண்ணும் நியதியில்லாதவர்களும், மேற்கண்ட ஐந்தில் நான்கு காரியங்கள் செய்தவர்களாகி நூற்றுக்கு எண்பது மதிப்புள்ள எண்களுடன், பிறவிப் பிணியைத் தவிர்க்கின்றவர்களாகி விடுகின்றார்கள். திருவள்ளுவரும்

**" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி "**

என்று அருளியிருக்கின்றார்.

இதில் " இம்மக்கட்பிறப்பின் கண்ணே உபதேச மொழிகளை அநுபவமுடைய தேசிகர் பால் கேட்டு, அதனால் மெய்ப்பொருளை உணர்ந்தவர் மீண்டும், இப்பிறப்பின்கண் வாராத நெறியைப் பின்பற்றுவர் " என்கிறார்.

இதனை நடைமுறையில் செய்து வருவதற்காகவே ஞாயிற்றுக் கிழமைகளில் இம்மையில் நன்மைதருவார் கோயிலிலும், திங்கட்கிழமைகளில், ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வர சுவாமி கோயிலிலும் புதன், வியாழன், சனி, ஆகிய மூன்று கிழமைகளிலும், மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன மடாலயத்திலும் கூட்டு வழிபாடுகளும், சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. அவற்றில் ஈடுபட்டுக் கூட்டுவழிபாடாற்றி அனுபவமொழிகளைக் கேட்கின்றவர்கள், மேலே சொன்ன ஐந்து காரியங்களில் மூன்று காரியங்களைச் செய்தவர்களாகி, நூற்றுக்கு அறுபது மதிப்புள்ள எண்களுடன் பிறவிப் பிணியைப் போக்கக் கூடியவர்களாகிவிடுகின்றார்கள்.

இந்த ஜென்மத்தில் எப்பேர்ப்பட்ட பாதகங்களைச் செய்திருந்தாலும் அவற்றைச் செய்தது தவறென்று உணர்ந்து அப்பாவங்களை நீக்கிக்கொள்ள விரும்பினால், அவற்றைச் செய்த அந்த உடலைக் கொண்டே அவற்றிற் குரிய பிராயச்சித்தம்செய்து நீக்கிவிடலாம் என்பது ஆண்டவனது நியதி! மதுரையில் நடந்த 64 திருவிளையாடல்களில் மாபாதகம் தீர்த்தபடலம் அதற்குப் போதிய சான்றாகும்!

ஆதலால் இந்த ஜென்மத்தில் மனத்தால், வாக்கால், உடலால் செய்த எப்பெற்றிப்பட்ட பாவங்களையும், இந்த உடல் அழிவதன் முன்னரே நீக்கிக் கொள்ளவேண்டிய அவசியத்தை உணர்ந்த அறிவுடையஇருபாலாரும், எத்தனை வயதுள்ளவராக இருந்தாலும், ஆடிவீதிப் பாராயணத்திலும் மேலே சொன்ன விபரப்படி ஆலயங்களிலும் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதின மடாலயத்திலும் நடைபெறு கின்ற கூட்டு வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும், தினமும் கலந்து ஈடுபட்டால், திருவருளாலும் குருவருளாலும் பாவநீக்கம் பெற்றுத் திகழலாம்.

வேறு ஊர்களிலுள்ள சைவ அன்பர்களும் தத்தம் ஊர் களில் உள்ள கோயில்களில், இம்முறைகளைத் தழுவி இறை வனை வழிபட்டு நலம் பெறலாம். நம் சமய வளர்ச்சிக்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும் ஆங்காங்கே வார வழிபாடு-கூட்டு வழிபாடு, குடும்ப வழிபாடு ஆகிய முறைகள் பரவ வேண்டு வது மிகமிக இன்றியமையாததாகும்.

# திருமணம்

மஞ்சக்கொல்லை பஞ்சாயத்துத் தலைவரும், நமது சமாஜத் தோடு மிக நெடுங்காலத் தொடர்புடையவரும், சமாஜத்தின் தஞ்சைமாவட்டப் பிரதிநிதியாகப் பலகாலம் தொடர்ந்து இருந்து வருபவரும் சைவ நலங்களிலும் தமிழ் நலங்களி லும் சிவபூசை முதலிய செயல்களிலும் மிகச் சிறந்த ஈடு பாடுடையவருமான மஞ்சக்கொல்லை உயர்திருவாளர் ராம. ச. சம்பந்தமூர்த்தி முதலியார் அவர்கள் திருமகனார் செல்வர் சிதம்பரநாதன் B.E.க்கும் மஞ்சக்கொல்லை உயர்திருவாளர் மு. சிங்காரவேலு முதலியார் அவர்கள் திருமகளார் செல்வி மங்கையர்க்கரசிக்கும் ஆவணித்திங்கள் 24-ம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது. திருமுருகன் திருவரு ளால் மணமக்கள் எல்லா நலங்களும் பெற்று நீடுவாழ்வார் களாக.

பழநியில் நிகழ்ந்த சமாஜ ஆண்டுவிழாவில்
ஆற்றிய சொற்பொழிவு:

# சைவ சாத்திர இலக்கியம்

## திரு. மு. அருணசலம், M. A.

### 14, 15-ஆம் நூற்றுண்டுகள்

மெய்கண்ட சாத்திரங்கள் யாவை என்று கூறுகின்ற வெண்பா எல்லோருக்கும் தெரிந்தது.

உந்தி களிறு உயர் போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் — வந்த அருட்
பண்பு வினு போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்பம் உற்று.

இது கூறுகின்ற சாத்திரங்கள் திருவுந்தியார், திருக் களிற்றுப் படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திரு வருட்பயன், வினு வெண்பா, போற்றிப் பஃறெடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் எனப் பதினுன்கு. இவை பல உரை களோடு சைவ சித்தாந்த சமாஜ வெளியீடாக இரண்டு பதிப்புக்கள் வெளி வந்துள்ளன. இவை பற்றிச் சில கருத் துக்களைத் தொடக்கத்தில் நாம் அறிதல் வேண்டும்.

இவ்வெண்பா எக்காலத்தில் யார் செய்தார் என்பது தெரியாது. எனினும், இதை ஆதாரமாய்க் கொண்டு, கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார் முதலான பலர், சென்ற நூற்றுண்டின் இறுதியில் இப்பதினுன்கு நூல் களையும் பழைய உரைகளுடன் பதிப்பித்தார்கள். இவற்றுள், சங்கற்ப நிராகரணத்தின் காலம் மட்டும் நமக்குத் திட்ட மாய்ப் புலப்படுத்தும் சான்று அதனுள்ளேயே காணப்படு கின்றது.

• "சாலி வாகன சகம் 1235 இல் தில்லை நடராசப் பெருமான் ஆலயத்தில் ஆனித் திருவிழா ஆறும் நாளில்

சமய வாதிகள் வந்து கூடி வாதம் செய்தனர். அங்கு மறை ஞான சம்பந்தருடைய மாணாக்கர் ஒருவர் வந்து பிறர்கோள் மறுத்துத் தம் கோள் நிறுவினர்'' என்று அந்நூல் கூறுகிறது. நூலின் தொடக்கத்தில் வரும் பின் கண்ட வரிகள் கால வரையறைக்கு ஆதாரமாய் உள்ளன.

வாய்ந்த நூல்கள் ஆய்ந்தன ராகி
ஆசா ருகி வீசிய சமத்துடன்
ஏழஞ் சிருநூறு எடுத்த ஆயிரம்
வாழும் நற் சகனம் மருவா நிற்பப்
பொற் பொது மலிந்த அற்புதன் ஆனி
ஆரும் விழாவில் பொற்றேர் ஆலயத்து
ஏரு அறுவர் நிரையில் இருப்ப

—என்பது பாட்டு. "ஏழஞ்சு இரு நூறு எடுத்த ஆயிரம்" என்பது சகம் 1235; அதாவது கி. பி. 1313. எனவே, இது சங்கற்ப நிராகரணம் தோன்றுவதற்கான காலம் திட்டமாய் வரையறை செய்ததாயிற்று. இதிலிருந்து பதினன்கு சாத்திரங்களுக்கும் பின் வருமாறு காலம் கூறுவார்கள். உந்தி 1148, களிறு 1178, சிவஞான போதம் 1223, சித்தி 1253, இருபா இருபஃது 1254, உண்மை விளக்கம் 1255, மற்ற எட்டும் முறையே 1306, 1307, 1308, 1309, 1310, 1311, 1312, 1313 ஆகிய ஆண்டுகள். இவை எந்த அளவு உண்மை என ஆராய்ந்து முடிவு கட்ட இப்போது இயலவில்லை. எனினும் சங்கற்ப நிராகரணம் குறிப்பிடும் காலம் 1313; அன்றியும் சாசன ஆராய்ச்சியாளர், மெய் கண்டாரின் காலம் கி. பி. 1232 ஐ ஒட்டி இருக்கலாம் எனக் கூறுவர். இவற்றால் மேற் குறிப்பிட்ட காலக் கணக்கு ஓரளவுக்குப் பொருந்துவதாய்க் கொள்வதில் தவறு இல்லை.

உந்தி களிறு இரண்டும் மிகப் பண்டைய நூல்கள் என்று பெரியோர் கூறுவர். அவை 12—ஆம் நூற்றாண்டு என்று முன் குறிப்பிட்டது ஏற்கக் கூடியது. முந்தியதான உந்தியின் ஆசிரியர் திருவியலூர் உய்ய வந்த தேவர். களிற்றுப் படியின் ஆசிரியர், அவருடைய மாணாக்கரான ஆளுடைய தேவ நாயனரின் மாணாக்கரான திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனர். சிவஞான போதம் செய்தவர் திரு

வெண்ணெய் நல்லூர் மெய கண்ட தேவர். அவருடைய மாணுக்கரான அருணந்தி சிவாசாரியர் சிவஞான சித்தியும், இருபா இருபதும் செய்தார். மெய் கண்டாரின் மற்ருெரு மாணுக்கரான திருவதிகை மனவாசகங் கடந்தார் உண்மை விளக்கம் செய்தார். சந்தான பரம்பரையில் அருணந்தியின் மாணுக்கரான மறைஞான சம்பந்தர் நூல் எதுவும் செய்யவில்லை. அவர் மாணுக்கரே கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியர். இவர் வாழ்ந்த காலம் 13 ஆம் நூற்ருண்டின் இறுதியும் 14 ஆம் நூற்ருண்டின் முற்பகுதியும் ஆகும்.

நாம் இங்கு ஆராயும் காலப் பகுதி உமாபதியாரோடு தொடங்குகிறது. ஆகவே அவருடைய வரலாற்றை நாம் அறியலாம். இவர் தில்லை மூவாயிரவருள் ஒருவராய்ப் பிறந்து, ஒருநாள் நடராஜா பூசை முடித்துச் செல்கையில் வீதியில் மதுகர விருத்தி செய்து சென்ற கடந்தை — மறைஞான சம்பந்தரை நோக்காது அப்பாற் செல்ல, அவர் 'பகற் குருடன் போகின்ருன்' எனக் கூறக் கேட்டு, அந்த நிலையே பரி பக்குவம் பெற்று அவரை வணங்கி அவரால் சோதிக்கப் பெற்று, பின் சிவ ஞான போத உபதேசம் பெற்ருர். இது பற்றி இவரைப் பூசையினின்றும் விலக்கிய தில்லை மூவாயிரவருக்கும் நடராஜா அருளால் தம் பெருமை உணர்த்தப் பெற்று, அவர் சீட்டுப்படி பெற்ருன் சாம்பானுக்கும், பின் முள்ளிச் செடிக்கும் முத்தி கொடுத்து, தடைபட்டிருந்த கொடி ஏறும் பொருட்டுக் கொடிக் கவி பாடினர். இவர் செய்த நூல்கள் மேற்கண்ட எட்டுமன்றி, கோயிற் புராணம், திருத் தொண்டர் புராண சாரம், திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம், திருப்பதிகக் கோவை என்பன; வட மொழியில் பௌஷ்கர வியாக்கியானம்.

இங்குக் குறிப்பிட்ட வரலாறும், நூல்களும் சைவ உலகத்தில் பிரசித்தமாய்த் தெரிந்தவை. ஆகவே அவற்றை ஆராய வேண்டியதில்லை. எனினும், ஒரு குறிப்பு மட்டும் இங்குப் பொருந்துவதாகும். உண்மை நெறி விளக்கம்

என்ற ஆறு பாடல்கள் கொண்ட சிறு நூல் இவர் செய்த தன்று; சீகாழிச் சிற்றம்பல நாடிகள் மாணுக்கரான சீகாழித் தத்துவ நாதர் செய்தது என்று திரு. அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள் சமாஜ சாத்திர முதற் பதிப்பில் விரிவாக எழுதியிருக்கிருர்கள். அக்கூற்றைப் பின்னுல் தத்துவ நாத ரைக் குறித்துப் பேசும் போது பார்ப்போம். பல ஏடுகளில் உண்மை நெறி விளக்கம் காணப் படாமல் சிற்றம்பல நாடிகள் செய்த துகளறு போதம் காணப்படுவதாம். இதுவே பதினுன்காவது சித்தாந்த சாத்திரமாகும் என்பது பிள்ளையவர்கள் கருத்து.

உமாபதியார் தொகுத்த திருமுறைத் திரட்டு என்பது சைவ உலகம் அதிகம் அறிந்திராத ஒரு சிறப்பான செய்தி.

## திருமுறைத் திரட்டு!

மூவர் தேவாரங்களும் அடங்கன் முறை எனப் பெயர் பெறும். திருமுறை என்றும் இவை சிறப்பாக வழங்கப் பெறும். மிகப் பழைய காலத்திலேயே இவற்றிலிருந்து தனியே தொகுக்கப் பெற்ற திரட்டுக்கள் இரண்டு வழங் கின. இவற்றுள் பிந்தியது இன்று வரை பெரிதும் வழக்கில் உள்ளது. இதுவே அகத்தியர் தேவாரத் திரட்டு. இது பற்றிப் பின்னே விரித்துக் கூறுவோம். அதைவிடக் காலத் தால் முந்தியதாக ஒரு திருமுறைத் திரட்டு உண்டு. அது உமாபதி சிவாசாரியார் திரட்டினுர் என்பது வழக்கு. இவ்வாறு குறிப்புக்கள் கிடைக்கின்றன. முதலாவது ஞான தீக்கைத் திருவிருத்தம் என்ற நூலின் எட்டாம் பாடல். அது பின் வருவது:

தேசுமிகும் அருட் பயின்ற சிவப்பிரகாசத்தில்
திருந்து பொதுச் சங்கற்ப நிராகரணத் திருத்தி
ஆசிலருள் விஞ வெண்பாச் சார்பு நூலால்
அருள் எளிதிற் குறிகூட அளித்து ஞானம்
பூசை தக்க காரண முன் புகன்றதனிற் புரிந்து
புணர் விக்கச் சிவஞான போதசித்தி வழி நூல்
மாசில்சத மணிக்கோவை முன்னூற் சான்று
மருவு திரு முறைத் திரட்டும் வைத்தனன் மன்
னுயிர்க்கே

இதன் கடைசி வரியில் "உயிருக்கு ஞான தீக்கைக்காக வைத்த நூல்கள் முறையே சிவஞான போதம், சித்திவழி நூல், மாசில் சத மணிக்கோவை, திருமுறைத் திரட்டு என்ற நான்கு ஆகும்" என்று அறிகிறோம். இந்தத் திருமுறைத் திரட்டு உமாபதியார் செய்தார்.

இனி இரண்டாவது சான்று; இந்தத் திருமுறைத் திரட்டுஏட்டுப் பிரதியின் இறுதியில் காணும் உமாபதிவணக்கச் செய்யுளின் பின், "திருமுறைத் திரட்டு உணர்த்தும் தேவே என்பதனாலும் அறிக" என்று எழுதப் பட்டுள்ளது. இவ்விரண்டாலும், இந்தத் திருமுறைத் திரட்டு மிகவும் பழமையானது என்றும், இதனைத் திரட்டினவர் உமாபதி சிவாசாரியர் என்றும் நாம் அறிகிறோம்.

இனி மூன்றாவது, தருமபுர மடத்தில் கி. பி. 1740 இல் வாழ்ந்த சிவானந்த தேசிகர் என்பவர், தாம்எழுதிய சம்பிரதாயதீபம் என்ற நூலில், இந்தத் திருமுறைத் திரட்டைக் குறிப்பிடுகின்றார். அளவைக்குத்தாம் பிரமாணமாகக் கொண்ட நூல் இவை என்று இரண்டு வெண்பாக்களால் உணர்த்துகிறார். அவை பின் வருவன:

வந்த அனுமான உபமான அளவைக்கிங்கு
எந்த நூல் முன்னூல் இயம்புவாய் — மைந்தா
சிவநெறி ப்ரகாசம் சிவப்பிரகாசம்
தவர்புகழ்ஞானா மிர்தந் தாம்

தத்துவப்ர காசஞ் சதுர்வேத சங்கிரகம்
முத்தர்பாற் கேள்வி முறைத் திரட்டுச் — சித்தி முதற்
பன்னூலில் உண்மை பகர்ந்தான் குரு அவைகள்
இந்நூலிற் சொன்னோம் எடுத்து.

இங்கு இரண்டாம் பாடலில் முறைத் திரட்டு என்று குறிப்பிடுவது, முன்னே குறிப்பிட்ட உமாபதி சிவாசாரியர் செய்த திருமுறைத் திரட்டு என்றே கொள்ளத்தகுந்தது.

இந்தத் திருமுறைத் திரட்டானது 99 திருப்பாசுரங்களை உடையது. திருவருட் பயனில் காணும் பாகுபாட்டைத் தழுவி இதுவும 1. பதி முது நிலை, 2. உயிரவை நிலை, 3. இருண்மல நிலை, 4. அருளது நிலை, 5. அருவுரு நிலை, 6. அறியும் நெறி, 7. உயிர் விளக்கம், 8. இன்புறு நிலை,

9. அஞ்செழுத்தருணிலை, 10. அணைந்தோர் தன்மை என்று பத்துப் பகுதியாகப் பகுக்கப் பட்டு முறையே 14, 13, 6, 8, 7, 14, 12, 5, 4, 16, ஆகிய பாசுரங்களை உடையது. மூவர் திருப்பாடல்களையும் கொண்டது. இப்பகுப்பு கொற்றவன் குடிப் பெரியாரே செய்த திருவருட் பயன் பகுப்பினைத் தொடர்ந்து செய்யப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதில் சம்பந்தர் பாடல்கள் 26, அப்பர் பாடல்கள் 63, சுந்தரர் பாடல்கள் 10. இப்பாடல்கள் திருமுறைக் கிரமப்படித் தொகுக்கப் பெறவில்லை. கருத்தமைதியும் தொடர்பும், கருதியே தொகுக்கப் பெற்றுள்ளன. மிக அதிகமான பாடல்கள் அப்பர் பாடல்கள்.

இந்தத் திரு முறைத் திரட்டு சைவ உலகில் இன்று வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே ஆதியில் தோன்றிய திருமுறைத் திரட்டு ஆதலினாலும், சந்தான ஆசாரியாரான உமாபதி சிவாசாரியர் திரட்டியது ஆதலாலும், இது சைவர்களிடையே பெரிதும் பயிலுதற்கு உரியது.

## மதுரைச் சிவப்பிரகாசர்:

இனி 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்துக்கு ஓர் எல்லையாக உமாபதியார் அமைவது போல, 15 ஆம் நூற்றாண்டின் இறுதிக்கு ஓர் எல்லையாக மதுரைச் சிவப்பிரகாசர் என்ற பெரியார் அமைகின்றார்.

இவர் உமாபதியார் பாடிய சிவப்பிரகாசத்துக்குப் பேருரை எழுதியிருக்கிறார். இருபா இருபதுக்கும் உரை எழுதி இருக்கிறார். இவ்வுரையின் அவதாரிகையில் “இந்நூலுக்கு வியாக்கியை செய்ய வேண்டினது கொண்டு மெய் கண்ட சந்ததியில் ஞானப் பிரகாசத் தம்பிரானார் கடாட்சித்த உபதேச சம்பிரதாயத்தைச் சகாத்தம் ஆயிரத்து நானூற்றொருபதின் மேற் செல்லா நின்ற காலத்திலே வியாக்கியை செய்ததென்ன அறிக” என்று உரைவரலாற்றை உரைத்தார். சிவப்பிரகாசத்தின் உரை இறுதியில் காணப்படுகின்ற பின் வரும் பாடலாலும் சிவப்பிரகாசர் உரையின் காலம் கி. பி. 1488 என்று ஏற்படுகிறது.

ஓது புகழ் சகாத்தம் ஆயிரத்து நானூற்று
ஒரு பதின் மேற் செல்கின்ற காலந் தன்னின்
மாது பயில் மதுரையில் வாழ் சிவப்பிர காசன்
வண்மையருள் நிகழ்ச்சியினுல் உண்மை யாக
ஈது மலம் ஈதுவினை ஈது மாயை
ஈதுயிர் பின் ஈது சிவம் என்றே காட்டித்
தீதில்சிவப் பிரகாசச் செய்யுள் நூறும்
தேர்ந்துரையிட் டேஉலகிற் சிறப்பித்தானே.

சகாத்தம் 1410 எனவே காலம் கி. பி. 1488 ஆகிறது. இது 15 ஆம் நூற்றுண்டின் முடிவுக்கான எல்லை என்று நாம் கருதுவதில் தவறில்லை.

இங்ஙனமாக நாம் மிகவும் திட்டமாய்த் தெரிந்த இந்த இரண்டு எல்லைகளுக்குள் அமைந்த சாத்திர நூற் பரப்பே 14, 15 ஆம் நூற்றுண்டுகளின் சைவ இலக்கிய சரித்திரமாகும். இவருடைய சிவப்பிரகாச உரை மிகவும் பழமையானது மிகவும் விரிவானது. உரைக்கு முன்னும் பல உரைகள் இருந்தன என்று இவர் கூறுகிறார். இவர் சிற்றம் பல நாடிகளுடைய சீடர்களுள் ஒருவராகிய சம்பந்த முனி வர் என்பவர் பரம்பரையில் மதுரை ஞானப்பிரகாசர் என்ப வருடைய சீடர், இவர் காவை அம்பல வாணத் தம்பிரானி டத்து மிகவும் ஈடுபாடு உடையவர்.

இவர் உரையின் சிறப்பு, இவர் கூறுகின்ற ஒவ்வொரு விளக்கக் கருத்துக்கும் ஆதாரத்தைப் பண்டைய சாத்திர நூல்களிலிருந்து எடுத்துக் கூறுவதாகும். இவர் மேற் கோள் ஒவ்வொன்றையும் எந்த நூல் என்று குறிப்பிட்டே எழுதுகிறார். இவ்வாறு இவர் எழுதியது, 14-15 ஆம் நூற் றுண்டுச் சைவ இலக்கியப் பரப்பை அறிவதற்கு ஒரு சிறந்த திறவு கோலாக உள்ளது. இவ்வாறு இவர் கூறுகின்ற சைவ நூல்கள் பின்வருவன. சித்தாந்த சாத்திரங்கள், உமாபதி சிவாசாரியருடைய கோயில் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், ஞானமிர்தப், தேசிகாலோத்தரம், தத்துவப் பிரகாசம், ஞான பூசை முதலான ஐந்து நூல்கள் உருப சொரூப அகவல், பிராசாத அகவல், சிவானந்த மாலை, தத் துவ விளக்கம், சிற்றம்பல நாடிகளுடைய வெண்பா, ஞானப்பஃறொடை, ஔவை குறள், திருப்புகழ் என்பன.

இவர் கூறும் தத்துவ சரிதை, மெய்ஞ்ஞான விளக்கம், சிவார்ச்சனு போதம் என்பன கிடைக்காத நூல்கள். இவரால் தெரிய வந்த மற்ெருரு சிறந்த நூல் திருநெறி விளக்கம். இவ்வாறு இப்பெரியார் இந்த நூல்களைக் குறிப்பிடுவதனுல் விளக்கமுருத ஆசிரியர்கள், நூல்கள், காலங்கள் விளக்கமுறுகின்றன. சைவ சமயம் செய்த புண்ணியத்தின் உரு என்று இவரைச் சொன்னுல் பொருந்தும். இவரைப் போல் கால அறிவுக்கு உபகாரியாயிருந்தவர் வேறு இலர்.

இவர் சிவப்பிரகாசத்திற்கு மட்டுமின்றி இருபா இருபஃதுக்கும் உரை செய்திருக்கிருர். அந்த உரையை விரித்து நமச்சிவாயத் தம்பிரான் செய்த விரிவுரை தான் இன்று வழக்கத்தில் உள்ளது. இவர் வடமொழி நூல்களிலும் நிரம்பப் பயிற்சி உடையவர். அசிந்திதம முதலான சிவாகமங்கள், சதுர்வேத சங்கிரகம், சூத சங்கிதை முதலிய வடமொழி நூல்களை இவர் குறிப்பிடுகின்ருர். இலக்கணங்களில் தொல்காப்பியம் நன்னூல் நேமிநாதம் ஆகிய நூல்களைக் குறிப்பிடுகிருர்.

இவ்வுரையாசிரியர் உரை மிகவும் கவர்ச்சிகரமானது. சொற்களின் நயத்தைப் பாராட்டத்தக்க முறையிலே எழுதுவார். 'வளர் விருத்தம்' என்பதை 'இந் நூலிற் சொற் சுருங்கிச் சுத்தம் பொருந்தியிருக்கையினுலும் ஆராயுந் தோறும் அர்த்தம் மேன்மேலும் விரிந்து வருகையினுலும்' என்று உரைப்பார். 'ஞானக் கடலமுது என்றது ஞானத்துக்குச் சமுத்திரத்தை உவமையாகக் கூறியதே தென்னில் சமுத்திரம் போல ஞானமும் அளவு படாத படியாலும், தன்னிடத்திலே கூடின ஆன்ம ஜாலங்களை அந்தச் சமுத்திரம் போல உள்ளடக்கி நிற்கையாலும், அந்தச் சமுத்திரம் போல அமுதம் விளைகையினுலும், அப்படிச் சொன்னதென அறிக' தற்சிவம் என்பதற்கு உண்மையான சிவமென்றதே தென்னில், ஒருவிகற்பங்களுமின்றித் தற் சுபாவமாய் நின்ற சொரூபத்தைச் சொன்னதென அறிக. எவையும் நன்ருகா என்றது கொண்டே பழைய நூல்களிற் குற்றங் குறையு

மெனக் கொள்க. எவையும் தீதாகா என்றது கொண்டே புதிய நூல்களில் நன்மை குறையுமெனக் கொள்க' தமக்கென ஒன்று இலரே என்றதைத் தமக்கென அறிவில்லாதவர்கள் என்றதே தென்னில், முன் ஜனனத்தில் தமக்கென ஒரு தவமில்லாதவர்கள் என்றதென்னவுமாமெனக்கொள்க.

## சிவார்ச்சனு போதம் :—

மதுரைச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்ற நூல்களில் ஒன்று. இது எண் சீர் ஆசிரிய விருத்தங்களால் ஆனது. இரண்டு பாடல்களை அவர் மேற்கோளாகக் காட்டுகிறார். இந்த இரண்டு பாடல்களும் நேரே சித்தியார் பாடல்களுக்கு விளக்க உரைபோல் அமைந்துள்ளன.

"சிவார்ச்சனு போதமானது சிவ பூஜையைக் கூறுகின்ற ஆகமங்கள், சோம சம்பு சிவாசாரியர், ஞான சிவாசாரியர் முதலிய பூர்வாசாரியர் சிவாகமத்தின் வழி விதித்த பத்ததிகள் ஆகியவற்றை மொழி பெயர்த்துச் செய்த நூல்களில் ஒன்று" என்று சிவஞான சுவாமிகள் சித்தாந்த மரபு கண்டன கண்டனத்தில் கூறுகின்றார்.

சிவார்ச்சனு போதச் செய்யுட்கள் இரண்டையும் ஆராயும் போது இது ஒரு விரிந்த நூலாய் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. மெய் கண்ட சாத்திரங்களுள் மிகவும் விரிந்த நூல் சிவஞான சித்தியார், சுபக்கம் மட்டும் 328 திரு விருத்தங்கள் உடையது. சிவார்ச்சனுபோதத்திலிருந்து மதுரைச் சிவப்பிரகாசர் மேற் கோள் காட்டும் இரு செய்யுட்களைக் கொண்டு, இந்நூலும் மிக விரிந்த சாத்திர நூலாயிருக்கலாம் என்று நாம் யூகிக்க இடமுண்டு. சிவார்ச்சனு போதம் என்ற நூல் இன்று கிடைக்க வில்லை.

பூஜைக் கிரியைகளின் தத்துவங்களை உணர்த்துகின்ற குரு மொழி விஞ விடை என்ற சிறு நூல், சிவப்பிரகாசம் கூறுகின்ற ஒரு சிவார்ச்சனு போதப் பாடலை மேற்கோளாக எடுத்து உதகரித்து, 'என்றார் உமாபதி சிவன்' என்று கூறுகிறது. இதனல் இந்நூல் உமாபதியார் செய்தது என்று தெரிகிறது.

**சீகாழிச் சிற்றம்பல நாடிகள் :—**

உமாபதி சிவாசாரியருக்குப் பின் 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒப்பற்ற ஞானசாரியராய்ப் பிரசித்தமாய் வாழ்ந்து சைவத்தை வளர்க்கவும் சாஸ்திர அறிவைப் பெருக்கவும் ஞான பரம்பரைகள் தோன்றவும், காரணமாய் இருந்த பெரியார் சீகாழிச் சிற்றம்பல நாடிகள். இந்த இரு நூற்றாண்டுகளின் சமயச் சரித்திரத்தை ஆராயும் போது இது நன்கு புலனாகின்றது.

உமாபதியினுடைய குருவாகிய கடந்தை—மறைஞான சம்பந்தருக்குச் சீடர் பலர். அவருள் கடைசியாக வந்த சீடரே உமாபதியார் என்பது வரலாறு. உமாபதி தம்முடைய கல்விப் பெருக்கால், பல சாத்திர நூல்கள் செய்யத் தகுதியுடையோராய், சந்தான ஆசாரியருள் நான்காமவராய், சைவ உலகம் போற்றும் பெருமை பெற்றார். மறைஞான சம்பந்தருக்கு வேறு சீடர்களும் இருந்தார்கள். அவர்களுள் மச்சுச் செட்டியார் என்பவர் வழி வந்தவர் சிற்றம்பல நாடிகள்.

சிற்றம்பல நாடிகள் வரலாறும் இங்கு அறியத்தக்கது. இவர் சீர்காழியில் பிறந்து அங்கு திரு வெண்ணெய் நல்லூர் மெய்கண்டார் பரம்பரையில் தோன்றிச் சைவ ஆசாரியராக இருந்த கங்கை மெய்கண்டார் என்பவரிடம் சிவஞானபோத உபதேசம் பெற்று, ஞானாசிரியராய் வாழ்ந்தார். பின்னர், கௌரி மாயூரம் அடைந்து அங்கு ஒருமடம் அமைத்து வாழ்ந்து வந்தார். அவருடைய சீடர் அறுபத்து மூவர், அவருடன் வாழ்ந்தார்கள். உணவில் வெப்பெண்ணெய் நெய்க்குப் பதில் பரிமாறிய போது நிர்விகற்ப ஞானம் எய்திய அனைவரும் அதை உணராது உண்ணக் கண்ணப்பர் என்ற ஓர் மாணாக்கர் மட்டும் சவிகற்ப ஞானம் உடையவராய்க் கசந்து உண்ணாது இருந்தார். பக்குவமில்லாமையால் இவர் கூட்டத்தினின்றும் நீங்க நேர்ந்தது, பின்னர் சிற்றம்பல நாடிகள் தாம் சிவத்தொடுகலக்கும் நாள் வந்தமை அறிந்து, அறுபத்து மூன்று சமாதிகள் அமைத்து, "தாம் மூன்று வெண்பாக்கள் பாடிச் சமாதியில் இறங்கினார்.

உடன் இருந்த அறுபத்து இரண்டு சீடரும் ஒவ்வொரு வெண்பா பாடித் தாழும் இறங்கி விட்டார்கள். பின் வந்த கண்ணப்பர் இதை உணர்ந்து சிற்றம்பல நாடிகளை வேண்டச் சமாதி திறந்து, நாடிகள் வெளிவந்து கண்ணப்பரைத் தம் முடன் ஐக்கிய மாக்கிக் கொண்டார் என்பது கதை. சிற்றம் பல நாடிகளுடைய சமாதி மாயூரத்திற்கு அருகேயுள்ள சித்தர் காட்டில் இன்றும் இருக்கிறது.

நாடிகள் மறைஞான சம்பந்தருடைய மாணுக்கர் மச்சுச் செட்டியாரின் மாணுக்கரான கங்கை மெய்கண்டாரின் மாணுக்கர். இவருடைய காலம், கி. பி. 1325 என்று கூறுதல் பொருந்தும்.

## சிற்றம்பல நாடி நூல்கள் :—

இவர் செய்த நூல்களில் மிகவும் சிறப்பானது துகளறு போதம். பல ஏட்டுப் பிரதிகளில் மெய்கண்ட சாத்திரங் களில் ஒன்றாக இதுவும் காணப்படுகிறது. அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள், இது 14 ஆவது சித்தாந்த சாத்திரமே என்று முடிவு செய்தார்கள். துகளறு போதம் என்றால், ஆணவமலமாகிய பெரியதுகளை அறுக்க வல்ல சிவ ஞானம் என்பது பொருள். எளிதாய்ப் பொருளாக வல்ல 100 வெண்பாக்களையுடையது. மதுரைச் சிவப்பிரகாசர், சிவ ஞான சுவாமி போன்ற உரையாசிரியரால் எடுத்தாளப் பெற்றுள்ளது. சிற்றம்பல நாடி நூலைக் கூறும் போது சிவப் பிரகாசர், "இவை திருவருளைப் பெற்று அனுபவித்த அடியார் வாக்கு" என்று விதந்து ஓதுவார். இந்நூல் பழைய தோர் சாமானிய உரையுடன் திருவாவடுதுறையாரால் அச்சிடப் பெற்றுள்ளது. அநேக பாடல்கள் சித்தியார் கருத்தையும் சொல்லையும் எடுத்தாளுவன.

**சிவப்பிரகாசக் கருத்து :** 64 ஆசிரியப்பா வரிகளால் சிவப்பிரகாசப் பாடல் அடிவாவும் அடைவும் தொகுத்து, உரைத்திருக்கிறார். இதை மதுரைச் சிவப் பிரகாசரே நமக்கு எடுத்து உதகரித்தவர்.

இப்படி உமாபதி தேவன் உரைத்த
மெய்ப்படு சிவப்பிர காச விருத்தக்
கருத்தின துண்மை விரித்துரைத் தருளினன்
சண்பையில் வாழும் தவகுரு நாதன்
பண்பமர் சிற்றம் பலவன் தானே.

**சாத்திரக் கொத்து :—** இது 1904—ல் வெளிவந்தது. துகளறு போதத்தோடு 9 பகுதிகள் உள்ளன. இவை பற்றிய சிறு குறிப்பு இங்கு கூறத் தக்கது.

**(அ) கலித்துறை :—** இது சிற்றம்பல நாடியைப் போற்றுவது; அவர் செய்த தன்று. பாடல் 54; 51-ஆம் பாடல் வெண்ணெய் மெய்கண்ட நாதனென்றே உரைக்கின்றது. சிறந்த சாத்திரக் கருத்துக்கள் பொதிந்த நூல்.

**(ஆ) வெண்பா :—** மேற் கூறிய வரலாறு இதைக் கூறுகிறது. எனினும் காப்புச் செய்யுளோடு நூல் தொடங்குவதை நோக்க, 63 சீடர் செய்த தென்றில்லாது, ஒருவரே செய்தாரெனக் கருதலாம். 14 ஆம் பாடல் தத்துவப் பிரகாசனை விளிக்கிறது. 10 பாடல்கள் சிற்றம்பல நாடி பெயரைக் குறிப்பிடாதவை. சிறந்த சமயக் கருத்துக்கள். சீடர் செய்த நூல். 65 பாடல்கள்.

**(இ) தாலாட்டு :—** சீடர் செய்த நூல். 63 கண்ணிகள். சிற்றம்பல நாடியைத் தாலாட்டுவது. வேலை நகர், சீராசை, என்ற ஊர்ப் பெயர்கள் பயில்கின்றன.

**(ஈ) அனுபூதி விளக்கம் :—** 65 கண்ணிகள். சீடர் செய்த. நூல் சிற்றம்பல நாடி உரைத்த அநுபூதியைக் கூறுவது. கங்கை மெய்கண்டாரையும் போற்றுகிறது.

**(உ, ஊ, எ) இரங்கல் :—** வருகாலம், நிகழ்காலம், செல்காலம் முறையே 49, 50, 54 கண்ணிகள் மூன்றும் சிற்றம்பல நாடிகள் செய்தவை. "மெய்கண்டான், சந்தானத்தை நீண்ட நாள் மேவாதிருந்தோமே" என்றும் வருந்திக் கூறுகிறார்.

**(ஏ) திருப்புன் முறுவல் :—** 11 விருத்தம். நாழிகள் பாடல். "எம்மான் திருப்புன் முறுவல் என்னை நோக்கி இரங்குவதோ" என்று பாடுகிறார்.

ஞானப்பஃறொடை :— சிற்றம்பல நாடிகள் நூல் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார். நூல், கொத்தில் காணப்படவில்லை.

**உண்மை நெறி விளக்கவுரை :—** சிற்றம்பல நாடிகள் உண்மை நெறி விளக்கவுரை செய்தாரென்று வெள்ளியம்பல வாணர் கூறுகின்றார். இது உண்மையாயின், உண்மை நெறி விளக்கம் செய்தவர் சீகாழித் தத்துவ நாதரன்று, உமாபதியாராதல் வேண்டும். ஆனால் இவ்வுரை இன்று கிடைத்திலது. வெள்ளியம்பல வாணர் கூற்று மேலும் ஆராய்தற்குரியது.

## சிற்றம்பல நாடிகள் பரம்பரை :—

சிற்றம்பல நாடிகள் பரம்பரை சிறிது இங்கு அறிதல் நன்று. கடந்தை மறை ஞான சம்பந்தரின் மாணாக்கராகிய மச்சுச் செட்டியார் என்பவர், காழிக் கங்கை மெய்கண்டாருக்குச் சிவஞான போதச் சாத்திர உபதேசம் செய்தார். இவர் சீகாழியில் தோன்றிய சிற்றம் பலவர் என்பவருக்கு உபதேசம் செய்தார். சிற்றம் பலவர் தம் பெருமையால், சிற்றம்பல நாடிகள் எனப் பின்னர் வழங்கப் பெற்றார் (சிற்றம் பலத்தை நாடினமையாலே, சிற்றம் பல நாடிகள்). இவரிடத்தில் அருள் பெற்றார் அநேகர். (1) முதலாமவர், சீகாழித்தத்துவநாதர். இவர் உண்மைநெறி விளக்கமும், இருபா இருபதுரையும் எழுதினார். (2) சீகாழித் தத்துவப் பிரகாசர் இவர் தத்துவப் பிரகாசம் செய்தார். இவர் சிவபுரம் தத்துவப் பிரகாசர் அல்லர். (3) காழிச் சம்பந்த பண்டாரம் (4) கண்ணப்பர் முதலாக 63 பேர். இந்த 63 பேரும் சிற்றம் பல நாடிகளுடன் ஓரே காலத்தில் சமாதி பெற்றனர். "ஏக காலத்தில் அறுபத்து மூன்று பெயருக்குச் சாம்பவ தீக்கையால் சத்தியோ நிர்வாண தானம் பண்ணித்தாமும் சமாதியிருந்து சிவகதியடையும் பெருமையுடைய சிற்றம் பல நாடிப் பண்டாரம்" என்று முத்தி நிச்சயப் பேருரையில் வெள்ளியம் பலவாணத் தம்பிரான் எழுதுகிறார்.

இனி மேற்பெயர் குறித்த நான்கு சீடர்களில் மூன்றும வராகிய சம்பந்த பண்டாரத்தின் வரலாறு தொடர்ந்து ஆராயத் தகுந்தது. இவர் சிவானந்த மாலை செய்தவர். இவருக்கும் பல சீடர். (1) ஒருவர் காவை அம்பல நாத (வாண)த்தம்பிரான். இவருடைய மாணுக்கர் மதுரை ஞானப் பிரகாசத் தம்பிரான். இவருடைய அருள் பெற்றவர் மதுரைச் சிவப்பிரகாசத் தம்பிரான், இவரே சிவப்பிரகாசப் பேருரை எழுதியவர். "இந்த வியாக்கியானஞ் செய்தது மெய்கண்ட சந்ததியில் காவையம் பல நாதத் தம்பிரானுர் திருவடிமரபில் ஆசாரியரில், மதுரையில் ஞானப்பிரகாசத் தம்பிரானுர் திருவடியடியாரில் சிவப்பிரகாசன் செய்த வியாக் கியான மென அறிக. இந்தச் சிவப்பிரகாசமாகிய நூலுக்கு முன்னோர்களும் வியாக்கி செய்திருக்க இப்பொழுது இந்த வியாக்கி செய்ய வேண்டுங் காரணமே தென்னில், முன்னுள்ள தம்பிரான்களெழுதிய வியாக்கிகளெல்லாம் பொழிப் புரையாக எழுத அதனோடு சமயிகள் கருத்துக் களுங் காட்டி என் தம்பிரான் ஞானப்பிரகாசத் தம்பிரானுர் எழுதின வியாக்கியின் வழியே தொந்தனேயும் பாட்டுஞ் சேர்த்து, அது நீங்கலாகக் காவையம்பல நாதத்தம்பிரானுர் இந்நூலின் கருத்தாகச் செய்தருளின குறள் வெண்பா நூறும் இந்நூலிற் பாட்டுகள் தோறும் பகுத்துச் சேர்த்து அந்தக் குறளின் கருத்தாகிய அத்தங்களுக்குந் தவறுவரா மல் முன்னுண்டான வியாக்கிகளின் பொழிப் போடும் விரி வோடும் நுட்பமும் அகலமுங் காட்டி வழி நூல்களிலுண் டான சூத்திரம் பன்னிரண்டு இந்நூலிலே வகுத்து வியாக்கி செய்ததெனெ அறிக." என்று அவர் கூறுவதால், இந்த மதுரை ஞானப் பிரகாசர் ஒரு வியாக்கியானம் செய்தார் என்று அறிகிறேம்.

### இனி இரண்டாவது சீடர் :

இவர் பெயர் சிவபுரம் ஞானப் பிரகாச பண்டாரம் இவர் பரம்பரையில் அடுத்து மூன்றுவது தலைமுறை கமலை ஞானப் பிரகாசர், அவருடைய சீடரே தருமையாதீனம்

தோற்றுவித்தருளிய குருஞான சம்பந்தர். இவ்விருபெரியார்களும் 16 ஆம் நூற்றூண்டினர் ; அனேக சாத்திர நூல்கள் செய்தவர்கள்.

சம்பந்த பண்டாரத்தின் மூன்றுவது சீடர் சம்பந்த சரணலயர் என்பவர். இவர் சீர்காழியூரினர், இவர் செய்த நூல்தத்துவ விளக்கம், இவருடைய மாணக்கர் திருநெறி விளக்கம் பாடிய ஆசிரியர். இவர் சம்பந்த சரணலயர் என்று தம் குருவைத் துதிக்கிருர். பின்னர் இவ்வாசிரியர் சரணலயரை விட்டு நீங்கிச் சிவாலய முனிவரைத் தம் ஞான குருவாய்க் கொண்டு வாழ்ந்தார் என்று அறிகிறோம்.

இச்சம்பந்த சரணலயர் பிற்காலத்தில் காழிக் கண்ணுடைய வள்ளல் என்று பெயர் பெற்றூர். இவர் திருஞான சம்பந்தன் ; சீகாழி நாடன் என்றும், கண்ணுடைச் சம்பந்தன் என்றும், வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன் என்றும் பல நூல்களில் பலவாருகக் குறிப்பிட்டுப் போற்றுகிருர். கண்ணுடைய வள்ளல் ஆகுமுன் இவர் தத்துவ விளக்கம் செய்தார். இவர் வள்ளல் ஆனபின் செய்த நூல்கள் மேலும் பல. இவரது ஒரு சீடர் ஞானியாகவும், பிராசாத யோக நெறி நின்ற யோகியாகவும் இருந்து பிராசாத தீபம் என்ற யோக மார்க்க நூல் செய்தார். மற்றொரு சீடர் திருநெறி விளக்கம் செய்தார். இருவருடைய பெயரும் தெரிந்திலது.

இதுவரை நாம் கூறிவந்தது மறைஞான தேசிகரிடமிருந்து உமாபதி வழியாக அல்லாமல், மச்சுச் செட்டியார் என்ற சீடர் மூலம் வளர்ந்த பரம்பரை.

இனி உமாபதியார் மூலம் வளர்ந்த பரம்பரையைக் குறித்தும் சில சொற்கள் கூறலாம். உமாபதியின் சீடர் அருள் நமச்சிவாயர், அவர்சீடர் சித்தர் சிவப்பிரகாசர்; அவர் சீடர் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்தாபித்த நமச்சிவாய மூர்த்தி,

ஆராய்ச்சியின்மை காரணமாக அறிஞர் என்று பெயர் படைத்தோர் பலர், இக்காலப் பகுதியை இருண்ட காலம் என்று கூறுகிறார்கள். அது சிறிதும் பொருத்தமன்று. மதுரைச் சிவப்பிரகாசர் என்ற ஒரு பெருந்தீபத்தை ஏற்றி நாம் பார்த்தால் அங்கு இத்தனைச் செய்திகளும், நூல்களும், ஆசாரியர்களும், ஞானிகளும் இருக்கக் காண்கிறோம். இவ்வளவு இருக்கும் போது இருண்ட காலமென்பது, வரலாறு அறியாமையே.

இவ்வாசிரியர்கள் நூல்கள் பற்றிய விளக்கங்களும் பின்னர்க் காணலாம்.

ஓர் எச்சரிக்கை பயனுடையதாகும். இவ்விரு நூற்றாண்டுகளிலும் சீகாழியானது சைவ ராஜதானியாகப் பிரகாசிக்கிறது. சிற்றம்பல நாடி போன்ற பெரியார் ஒளிகாலும் ஞாயிறு போலத் திகழ்கிறார்கள். அனைவருக்கும் மூலஒளி, காழிச் சம்பந்தப் பிள்ளையான ஆளுடைப் பிள்ளையார். ஆகலால் எல்லா ஆசிரியர்களும் சம்பந்தரையே பாடுகிறார்கள். சம்பந்தர் செய்துள்ள அற்புதங்களைத் தம் ஞானாசிரியர்மீது ஏற்றியும் கூறுகிறார்கள். ஆசாரியன் என்ற மாத்திரத்தில் அனேகர் சம்பந்தரையே விளிக்கிறார்கள். இந்தப் பெயரைக் கண்டு நாம் குழம்பக் கூடாது என்று கூறுவது முக்கியம்.

வடலூருக்குச் செல்பவர்கள் இன்றும் வியாழனன்று வெண்பொங்கல் செய்து, சத்திய ஞானசபையில் சம்பந்தருக்குப் படைக்கிறார்களாம். இராமலிங்க சுவாமிகள் சபையில் சம்பந்தருக்கு என்வழிபாடு என்று கேட்டுப் பயனில்லை. சம்பந்தரிடம் உள்ள ஈடுபாடு இவ்வாறு வெளியாகிறது என்று நாம் கருதவேண்டும். (தொடரும்)

# செய்திச் சுருக்கங்கள்

## அருள் நந்தி சிவாசாரியர் திருநாள் :—

நமது சமாஜத்தின் சார்பில், 27-9-62 வியாழன் அன்று மாலை, இராயப் பேட்டைப் பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையின் திரு வி க. மணி மண்டபத்தில் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. சைவப் பெரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றினுர்கள். சமாஜச் செயலர், வரவேற்புரையும் நன்றியுரையும் வழங்கினுர்கள்.

## சைவ சித்தாந்த சாத்திர வகுப்பு :—

சென்னை, தங்கசாலைத் தெரு, தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர் நிலைப் பள்ளியில், செப்டம்பர் 10-11 12-13-14 தேதிகளில் சிவஞான சித்தியார் பரபக்கம் பற்றிய வகுப்புக்களும் சென்னை இராயப் பேட்டைப் பால சுப்பிரமணிய பக்த ஜன சபையின் திரு. வி. க. மணி மண்டபத்தில் செப்டம்பர் 25–26–27 தேதிகளில் சங்கற்ப நிராகரணம் பற்றிய வகுப்புக்களும், குருகுலம்சிவத்திருஅழகரடிகள்(ஆசிரியர் இளவழகனுர்) அவர்களால் நன்கினிது நடத்தப் பெற்றன. திரளான அன்பர்கள் வந்திருந்து கேட்டுப் பயன் பெற்றனர்

**மாதாந்தர வழிபாடு :—** சென்னை அரண்மனைக்காரன் தெருவிலுள்ள கச்சாலீசுவரர் கோயிலில் 23-9-62 ஞாயிறு அன்று, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் சிறப்புற நடைபெற்றது. வழிபாட்டு நிகழ்ச்சிக்கு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், சமயப் பிரசாரக் கூட்டத்திற்குத் திரு. டி. புருஷோத்தம முதலியார், M. L C. அவர்களும் தலைமை தாங்கினுர்கள். நமது சமாஜ அன்பர்களும், பொது மக்களும் பெருந்திரளாக வந்திருந்து வழிபாட்டிற் கலந்து கொண்டனர் செயலர் திரு. ச. சிவகுமார், M. A. அவர்கள் அனைவர்க்கும் வரவேற்புரையும் நன்றியுரையும் வழங்கினுர்கள்.

# சமாஜ வெளியீடுகள்

★ விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன ★

| | | முன்விலை | இப்போதுவிலை |
|---|---|---|---|
| 1. | பெரியபுராணம் (காலிக்கோ கட்டிடம்) | ரூ. 3. | ரூ 2. |
| 2 | சைவசமயச் சொற் பொழிவுகள் | ரூ. 3. | ரூ 2 |
| 3. | ஞானியாரடிகள் நினைவுமலர் | ரூ. 2. | ரூ. 1. |
| 4. | பொன்விழாமலர் | ரூ. 1. | 50 ந. பை. |
| 5. | முருகன் முந்நூல் | | 40 ,, |
| 6. | அறப்பயிற்சி மாலை (முதற்புத்தகம்) | | 50 ,, |

இவை மயிலாப்பூர் கிழமாடவீதியில் 12. எண்ணுள்ள சமாஜ அலுவலகத்தில் கிடைக்கும். சில பிரதிகள் மட்டுமே உள்ளன. அன்பர்கள் பெற முந்துக.

---

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1 by V. Sambandan, Edited by A. Somasundaram Chettiar, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.